**கவனிக்க.-** *2009.02.13 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (II அ) மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1590 - 2009 පෙබරවාරි 20 වැනි සිකුරාදා - 2009.02.20**

*1590 ஆம் இலக்கம் – 2009 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 198 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 199 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்;ராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்;ராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் .

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - அநுராதபுர மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, பங்குனி மாதம் 20 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல,
2009 தை மாதம் 22 ஆந் திகதி.

**அட்டவணை**

| | மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|---|
| 01. | அநுராதபுரம் | கெகிராவ | கலாகம் பலாத பிரிவின் திப்படுவவ பிரதேச முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், அநுராதபுரம் |

2-358

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவி - காலி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, மாசி மாதம் 20 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
2009, மாசி மாதம் 03 ஆந் திகதி.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலக பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| காலி | நெலுவ | ஹினிதும்பத்துவ பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி மற்றும் அம்பன பிரிவு பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், காலி |
| காலி | யக்கலமுல்ல | தல்பேபத்துவ பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி மற்றும் கொட்டாவ பிரிவு பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், காலி |
| காலி | பொபே-பொட்டல | காலி நான்கு கிறேவேற்ஸ் பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி மற்றும் லபுதுவ பிரிவு பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், காலி |

2-515

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## ஆரம்பதர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை – 2009, பங்குனி

1991.05.17 ஆந் திகதியும் 662/11 ஆம் இலக்கமும் கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள சுகாதார சேவையின் வைத்திய உத்தியோகத்தர்கள் தொடர்பான நியதிச் சட்டக்கோவையின் 07 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்கள் II ஆம் தரத்திற்கு உயர்த்தப்படுவதற்கு முன்பும் பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்கள் தமது சேவையில் உறுதிப்படுத்துவதற்கு முன்பும் தேர்ச்சியடைய வேண்டிய திணைக்களப் பரீட்சை 2009.03.29 ஆந் திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறிவிக்கப் படுகின்றது. பரீட்சை நடாத்தப்படும் இடமும் கால அட்டவணையும் பிரவேசப்பத்திரத்துடன் அனுப்பிவைக்கப்படும்.

2. ***தகைமைகள்.-*** இதுவரை இப்பரீட்சையைப் பூரணப்படுத்தாத ஆரம்ப தரத்தின் வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்கு மட்டும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

3. ***விண்ணப்பங்கள்.-*** இச்சுற்று நிரூபத்தில் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை போன்ற விண்ணப்பதாரிகளினால் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் நிறுவனத் தலைவரின் மூலம் கொழும்பு – 10, இலக்கம் 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, சுவசிரிபாய கட்டிடத்தில் பணிப்பாளர் (பரீட்சை) அவர்களுக்கு 2009.03.08 ஆந் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலின் மூலம் அனுப்ப வேண்டும். தனது விண்ணப்பத்துடன் முகவரி எழுதப்பட்ட ரூபா 30.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 9" × 4" அளவுள்ள கடித உறையொன்றும் அனுப்ப வேண்டும். (இதில் விரும்பிய வகையில் அலுவலக முகவரி அல்லது சொந்த முகவரியை எழுதலாம்).

4. ***பரீட்சைக் கட்டணம்.-*** (i) முதன் முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள், பரீட்சைக் கட்டணத்தினின்றும் விதிவிலக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் ஒரு விடயத்திற்கு ரூபா 25 வீதம் மதிப்பிழக்கப்படாத முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி அதன் மேல் தனது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு அதை செல்லுபடி நீக்கம் புரியப்படுதல் வேண்டும்.

(ii) எக்காரணத்தைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சையொன்றின் பொருட்டு மாற்றவோ அல்லது மீளச் செலுத்தப்படுதலோ புரியப்பட மாட்டாது.

5. ***பரீட்சைக்கு உட்படுத்திக்கொள்தல்.-*** (i) ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்படும். அவ் அனுமதி அட்டைகளை உரிய முறையில் நிரப்பி பரீட்சை நிலைய அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்கப்படாத எந்தஒரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்.

(ii) விண்ணப்பதாரர்களினால் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை நிலைய அதிபருக்குத் தனது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை ;
(ஆ) திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ;
(இ) சாரதி அனுமதிப்பத்திரம் ;
(ஈ) கடவுச்சீட்டு

(iii) தவிர்க்க முடியாத காரணங்களினால் பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவர்கள் சுகாதார அமைச்சின் இணையத்தளத்தோடு தங்களிற்கான பரீட்சை நிலையம், பரீட்சைச் சுட்டெண், போன்ற வற்றினை பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறு பெற்றுக் கொண்ட வர்கள் தங்களிற்கு பொறுப்பான மேற்பார்வை உத்தியோகத்தரிடம் தங்களின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்றினைப் பெற்றுக்கொண்டு இணையத் தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில் தாங்கள் பரீட்சைக்குத் தோற்ற முடியும். (இணையத்தள முகவரி : www.health.gov.lk)

6. ***பரீட்சைத் திட்டம்.-*** இப்பரீட்சை மூன்று எழுத்து மூல வினாப்பத்திரங்களையும் சிங்களம்/ தமிழ் வாய்மொழிப் பரீட்சையொன்றையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்ச்சியடைவதன் பொருட்டு ஒரு விடயத்திற்கு குறைந்தபட்சம் 50 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு அமர்வில் அல்லது பல அமர்வுகளில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையைப் பூரணப்படுத்திக் கொள்ளலாம்.

7. ***பரீட்சைப் பாடத்திட்டம்.-***

7.1 ***எழுத்துப் பரீட்சை***

7.1.1 *தாபனவிதிக்கோவை*
(நேரம் 02 மணித்தியாலம்) 08 வினாக்களில் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.
மொத்தபுள்ளிகள் 100

பாடவிதானம்
(i) தாபனவிதிக்கோவை
(அ) I ஆம் பிரிவு ii, iii, v, vi, vii, viii, ix, xi, xii, xiii, xv, xxiv, xxv, xxvii, xxviii, xxx, xxxi, xxxii, xxxiii அத்தியாயங்கள்.
(ஆ) II ஆம் பிரிவு XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள்.

(ii) சுகாதார சேவைத் திணைக்களத்தின் பொதுவான ஒழுங்குவிதிகள்.

(iii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைகள்.

7.1.2 *வைத்தியசாலைகள், மருந்துச்சாலைகள் என்பன வற்றின் நிர்வாகம்* (நேரம் 1 1/ 2 மணித்தியாலம்) 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.
மொத்தப் புள்ளிகள் 100.

பாடவிதானம்
சுகாதாரக் கைநூல்
I ஆம் பிரிவு – வைத்திய சேவை
II ஆம் பிரிவு - இரசாயனகூட சேவை

7.1.3 *கணக்கியல்.-* (நேரம் 02 மணித்தியாலம்) 07 வினாக் களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்,
மொத்தப்புள்ளிகள் - 100.

பாடவிதானம்
(I) நிதிப்பிரமாணம் - I ஆம் பிரிவு
I ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்
II ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்
III ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்
IV ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்
V ஆம் அத்தியாயம் - 1, 2, 3, 4, 6 ஆம் பிரிவுகள்
VI ஆம் அத்தியாயம் - எல்லாப் பிரிவுகளுக்கும்
VII ஆம் அத்தியாயம் - 1, 2, 3, 4, 6 ஆம் பிரிவுகள்
(II) சுகாதாரத் திணைக்களத்தில் களஞ்சியக் கணக்கு வைத்தல் தொடர்பான ஒழுங்கு விதிகள்.
(III) சுகாதாரத் திணைக்களத்தில் வழிகாட்டிக் கைநூலில் நிதி தொடர்பான பந்தி.
(IV) சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஒருவரின் நாளாந்த கடமைகளுக்கு ஏற்புடைய நிதிப் பிரமாணம்.

7.2 **சிங்களம்/தமிழ் வாய்மொழிப் பரீட்சை.**– சிங்களம்/தமிழ் ஆற்றலை அளப்பதன் பொருட்டு திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களினால் கொழும்பில் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சையாகும். மொத்தப் புள்ளிகள் 100. தனது நாளாந்த கடமைகளில் ஈடுபடும் பொழுது மேலோங்கும் நிகழ்வுகளின் பொருட்டு சிங்களத்தில் அல்லது தமிழ் மொழியில் கலந்துரையாடுவதற்கு உத்தியோகத்தருக்கு உள்ள ஆற்றலைப் பரீட்சித்தல்.

8. தயவுசெய்து இச் சுற்றுநிரூபத்தை உங்கள் பிரிவில்/விசேட இயக்கத்தில்/நிறுவனத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும். இத்தகவல்கள் www.health.gov.lk

9. 2008 ஆம் ஆண்டின் செத்தெம்பர் மாதம் நடாத்தப்பட்ட மேற்படி பரீட்சைக்கான பெறுபேறுகள் விரைவில் வெளியிடப்படும் என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

(வைத்தியர்) யூ. ஏ. அஜித்மென்டிஸ்,
சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்,
சுகாதார செயலாளருக்காக.

சுகாதார போஷணை நலன்நோன்பு அமைச்சு,
"சுவசிரிபாய",
385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2009.01.30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக பிரயோகத்தின் பொருட்டு)

**ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை – 2009, பங்குனி**

Departmental Examination for Preliminary Grade Medical officers & Dental Surgeons - 2009 March

1. (அ) (i) விண்ணப்பதாரரின் பெயர் (சிங்களத்தில் அல்லது தமிழில் முதலெழுத்துக்களை இறுதியில் எழுதவும்) : -----.

(ii) விண்ணப்பதாரரின் பெயர் (ஆங்கில கெபிடல் எழுத்தில்) முதலெழுத்துக்களை இறுதியில் எழுதவும்) :-

(iii) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் (சிங்களத்தில் அல்லது தமிழில்) :-----.

(iv) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் (ஆங்கில கபிடல் எழுத்தில்) :-

(ஆ) (i) அலுவலகப் பெயர் (வைத்திய உத்தியோகத்தர்/பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்) :-----.

(ii) தகுதிகூர் நிலைக்கால நியமனம் பெற்ற திகதி :-----.

(iii) ஆரம்ப தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.

2. நீங்கள் இம்முறை தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் விடயங்களுக்கு முன்னால் உள்ள கூண்டினுள் "✓" அடையாளத்தை இடவும். தோற்றாவிடின் "X" குறியை இடவும்.

| | | | |
|---|---|---|---|
| தாபன விதிக்கோவை | | வைத்தியசாலைகள் மருந்துச் சாலைகள் என்பனவற்றின் நிர்வாகம் | |
| கணக்கியல் | | | |
| சிங்களம் வாய்மொழி | | தமிழ் வாய்மொழி | |

3. (அ) தற்பொழுது சேவையாற்றும் இடம் :-----.

(ஆ) அதற்குரிய மாவட்டம் :-----.

(இ) பரீட்சைக்குத் தோற்றக்கூடிய அண்மையில் அமைந்துள்ள தாதியர் பாடசாலை :-----.

(ஈ) கீழே கொடுக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையங்களினுள் தங்களிற்கு விருப்பமான பரீட்சை நிலையத்திற்கு பொருத்தமான கூண்டினுள் சரி "✓" அடையாளமிடுக. திணைக்களத்தின் தேவையின் பொருட்டோ, குறிப்பிட்ட பரீட்சை நிலையத்திற்கு போதுமான எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்காதவிடத்தோ கீழ்குறிப்பிடப் பட்டுள்ள பரீட்சை நிலையங்களினுள் ஒன்று அல்லது சில நீக்கப்பட்டு அப்பரீட்சை நிலையங்களுக்கு விண்ணப்பித்தவர்கள் அதற்கு அண்மையில் அமைந்துள்ள பரீட்சை நிலையத்திற்கு அல்லது சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் தீர்மானிக்கப்படும் பரீட்சை நிலையத்திற்கு இப்பரீட்சையின் பொருட்டு இணைத்துக் கொள்ளப்படுவீர்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | | கந்தானை | | அம்பாந்தோட்டை | |
| களுத்துறை | | காலி | | பதுளை | |
| குருநாகல் | | அனுராதபுரம் | | இரத்தினபுரி | |
| கண்டி | | மட்டக்களப்பு | | யாழ்ப்பாணம் | |
| அம்பாறை | | | | | |

(உ) அனுமதிப்பத்திரம் அனுப்புவதன் பொருட்டு பிழையற்ற தெளிவாக முகவரி எழுதப்பட்ட 9" × 4" அளவுள்ள ரூபா 30.00 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்ட கடித உறையொன்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

(ஊ) (i) அஞ்சல் முகவரி (சிங்களத்தில் அல்லது தமிழில்) : -----.

(ii) அஞ்சல் முகவரி (ஆங்கில கபிடல் எழுத்தில்) :-----.

4. பரீட்சைக்குத் தோற்றும் மொழி (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) : -----.

5. (அ) இதற்கு முன் இப்பரீட்சைக்குத் தோற்றி உள்ளீர்களா? :-----.

(ஆ) முதன் முறை அல்லாவிடின் முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளனவா? அவ்வாறு தோற்றி இருப்பின் இம்முறையின் பொருட்டு முத்திரைகள் ஒட்டியுள்ளதா? :-----.

முத்திரைக் கூண்டு

6. விண்ணப்பதாரரின் உறுதியுரை.- எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில்-

(i) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவைகளெனவும், நான் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன்முறையாக என்றபடியினால் கட்டணம் செலுத்தத் தேவையில்லை எனவும்/(முதன் முறை அல்லாத படியால் ரூபா .......... பெறுமதியான முத்திரைகள் ஒட்டியுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்திற்கு என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் செல்லுபடி நீக்கம் செய்யப்படுவதற்கு முன்பு பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ii) சுகாதார சேவைத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டத்திட்டங்களுக்கு அமைந்து நடப்பதற்கும், இப்பரீட்சை தொடர்பான நியதிச் சட்டத்தின்படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையை இரத்து செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எவ்விதத் தீர்மானத்திற்கும் நான் அமைவேன் எனவும் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

**நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர் / திருமதி / செல்வி ..................................................... என்பவரை நான் நன்றாக அறிவதுடன், இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறை/ அல்லாதபடியால் ரூபா ............ பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும்/ முத்திரை ஒட்டவேண்டியதில்லை எனவும் எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

------,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.

**பன்முகப்படுத்தப்பட்ட பகுதி/விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர்/திருமதி/செல்வி .................................................. என்பவர் வைத்திய உத்தியோகத்தர் ஒருவர்/பல் சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவராக எனது பிரிவில்/இயக்கத்தில் சேவையாற்றுகின்றார் எனவும் விண்ணபத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர் வழிக்கோவையிலுள்ள விபரங்களின்படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவனுக்கு/ அவளுக்குத் தகைமைகள் உண்டு எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
பன்முகப்படுத்தப்பட்ட பகுதி/விசேட
இயக்கத் தலைவரின் கையொப்பம்
(முத்திரை இடப்படுதல் வேண்டும்).

திகதி :-----.
(*தேவையற்றவற்றைக் கீறிவிடவும்.)

2-383

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

அறநெறிப் பாடசாலை
இறுதிச் சான்றிதழ் பரீட்சை, இந்துசமயம் – 2008

**பரீட்சை நிபந்தனைகளும் பாடத்திட்டமும்.**- மேற்படி பரீட்சை 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களினால் இலங்கை முழுவதும் நடாத்தப்படும்.

**2. பரீட்சை நடைபெறும் நிலையங்கள்.**- விண்ணப்பதாரிகளின் தொகைக்கேற்ப நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும்.

எனினும், குறிப்பிட்ட தொகையான விண்ணப்பதாரிகள் ஒரு பரீட்சை நிலையத்திற்கு விண்ணப்பிக்காத பட்சத்தில், அப்பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு, அருகிலுள்ள வேறொரு பரீட்சை நிலையத்திற் தோற்றுமாறு விண்ணப்பதாரிகள் கோரப்படுவர். நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நிறுவப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையங்கள் தொடர்பான விபரங்கள் இவ்வறிவித்தலின் இறுதியிலேயே சேர்க்கப்பட்டுள்ள இணைப்பு I இல் காட்டப்பட்டுள்ளன.

**3. மொழிமூலமும் பாடத்திட்டமும் :**

3.1 இப்பரீட்சைக்குரிய பாடத்திட்டம் பின்னிணைப்பு 02 இல் காட்டப்பட்டுள்ளது.

3.2 இப்பரீட்சை தமிழ் மொழியில் மாத்திரம் நடாத்தப்படும்.

**4. தகைமை.**- இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் விண்ணப்பதாரி கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் :

4.1 இப்பரீட்சை இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட இந்து அறநெறிப் பாடசாலைகளிற் பயிலும் மேற்பிரிவு மாணவர்களுக்கானது. மேற்பிரிவில் பத்தாம் ஆண்டில் சித்திபெற்று, பதினோராம் ஆண்டில் கல்வியை மேற்கொள்பவர்களும் ஏற்கனவே இப்பரீட்சையில் தோற்றி சித்தியடையாதவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

**குறிப்பு.**- (அ) இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள விண்ணப்பதாரி மேற்குறித்த தகைமையைப் பெற்றுள்ளார் என்பதனை இந்து அறநெறிப் பாடசாலையின் அதிபர் அல்லது பொறுப்பாளர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(ஆ) பதிவுசெய்யப்பட்ட அறநெறிப் பாடசாலையொன்றின் ஊடாக மட்டுமே இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

5. கடந்த ஆண்டில் மாணவர்களை பரீட்சைக்கு அனுப்பிவைத்த எல்லா இந்து அறநெறிப் பாடசாலைகளுக்கும் போதுமான விண்ணப்பப்பத்திரங்களும், அறிவுறுத்தல்களும் தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பப்படிவம் கிடைக்காத, அல்லது 2007 ஆம் ஆண்டுப் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகளை அனுப்பாத இந்து அறநெறிப் பாடசாலை ஆயின் பாடசாலையின் பெயர், முகவரி, தோற்றவுள்ள விண்ணப்பதாரிகளின் தொகை போன்ற விபரங்களைக் குறிப்பிட்டு 5.3 பிரிவிற் குறிப்பிட்ட முகவரிக்கு 2009.03.06 ஆந் திகதிக்கு முன்னர் அறிவிக்க வேண்டும் :

5.1 விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2009.03.20 ஆந் திகதி ஆகும்.

5.2 விண்ணப்பப்படிவங்கள், தெளிவாகவும் பிழையின்றியும் நிரப்பப்படல் வேண்டும். அங்ஙனம் நிரப்பப்படாத விண்ணப்பங்களும், இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

5.3 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலம் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் :

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
தேசிய மதிப்பீட்டிற்கும், பரீட்சித்தலுக்குமான சேவை,
பெலவத்தை, பத்தரமுல்லை.

விண்ணப்பங்கள் கிடைத்தமை தொடர்பாக அறிவிக்கப்பட மாட்டாது.

5.4 விண்ணப்பங்களை இணைத்து அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை, இந்து சமயம் - 2008" எனவும் பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கும் நகரமும் குறிப்பிடப்படல் வேண்டும்.

5.5 விண்ணப்பங்களோடு எவ்வித சான்றிதழ்களையும் இணைத்து அனுப்பக் கூடாது. இந்து அறநெறிப் பாடசாலை யின் அதிபர் அல்லது பொறுப்பாளர், விண்ணப்பதாரி குறித்த தகைமையைப் பெற்றுள்ளாரென்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

6. **பரீட்சைக் கட்டணம்**.- முதற்தடவையாகத் தோற்றுபவர்கள், பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. ஏனையோருக்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 60 ஆகும். நூன சித்தி பாடமொன்றிற்கு ரூபா 50 ஆகும் :

6.1 பரீட்சைக் கட்டணம் செலுத்தவேண்டிய விண்ணப்பதாரிகள் (தமது அறநெறிப் பாடசாலை முதல்வரூடாக) நாட்டின் எந்தவொரு தபால் நிலையத்திலும் உரிய பணத்தைச் செலுத்தி, பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தின் மறுபுறத்தில் ஒட்டி அனுப்பவேண்டும். (முத்திரை/காசுக் கட்டளை மூலமாக பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்த முடியாது.)

6.2 அறநெறிப் பாடசாலை முதல்வர்கள் உரிய பரீட்சார்த்திகளிட மிருந்து பெற்றுக்கொள்ளும் பரீட்சைக் கட்டணத்தை மொத்தமாக அருகாமையிலுள்ள தபாலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் மறுபுறத்தில் ஒட்டி அனுப்புதல் வேண்டும்.

6.3 எக்காரணம் கொண்டும் இப்பரீட்சைக்குச் செலுத்தப்பட்ட கட்டணம், வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ, மீளப்பெறவோ இயலாததாகும்.

7. பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் உரிய அறநெறிப் பாடசாலை அதிபர்கள்/ பொறுப்பாளர்கள் மூலமாக விநியோகிக்கப்படும்.

7.1 சகல விண்ணப்பதாரிகளும் தாம் முதலாவதாகத் தோற்றும் பாடத்தின்போது தமது அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்க வேண்டும். விண்ணப்ப தாரி ஒருவர் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத போதோ அல்லது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் குறிப்பிடப்பட்ட பரீட்சை நிலையம் தவிர்ந்த வேறொரு நிலையத்தில் தோற்றும்போதோ அவரது பரீட்சார்த்தித் தகவு இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதி அட்டையில் விண்ணப்பதாரியின் கையொப்பம், இந்து அறநெறிப் பாடசாலை அதிபர் மூலம் குறித்த விண்ணப்பதாரியினுடையது என உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு ஏழு தினங்களுக்கு முன் அனுமதி அட்டைகள் கிடைக்காதவிடத்து விண்ணப்பங்களை சமர்ப்பித்த இந்து அறநெறிப் பாடசாலையின் அதிபர், இவ்விடயத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவித்தல் வேண்டும். அத்தகைய எல்லாச் சந்தர்ப்பங் களிலும் கீழ்வரும் விடயங்கள் தெரிவிக்கப்படல் வேண்டும் :

1. பரீட்சையின் பெயர் ;
2. அறநெறிப் பாடசாலையின் பெயர் ;
3. விண்ணப்பதாரியின் முழுப்பெயரும் விலாசமும் ;
4. விண்ணப்பித்த பரீட்சை நிலையம்/நகரம் ;
5. விண்ணப்பங்களைப் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்த தபால் நிலையம் ;
6. பதிவு இலக்கமும், திகதியும்.

8. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**.- இந்து அறநெறிப் பாடசாலை ஒன்றின் மூலம் தோற்றும் மாணவர்கள், பரீட்சை நிலையத்தில் ஒவ்வொரு பாடத்திற்குத் தோற்றும் சந்தர்ப்பத்திலும், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் ஏற்றுக்கொள்ளத்தக்கவாறு தமது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்குத் தயாராகச் சமுகமளித்தல் வேண்டும். இதற்கு கீழ்வரும் ஆவணங்களுள் ஒன்று ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும்.

8.1 ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் விநியோகிக்கப் பட்ட தேசிய ஆளடையாள அட்டை

8.2 செல்லுபடியாகும் பிரயாணக் கடவுச்சீட்டு (Passport)

9. **சித்திபெற்றமையை தீர்மானித்தலும், பரீட்சை முடிவுகளை வெளியிடலும்**.- இப்பரீட்சைக்குரிய பாடங்கள் 4 ஆகும். குறித்த நான்கு பாடங்களிலும் சித்திபெறும் பரீட்சார்த்திகள் மட்டும் இப்பரீட்சையில் சித்திபெற்றோராகக் கருதப்படுவர்.

ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்திபெற்று ஒரு பாடத்தில் மற்றும் சித்திபெறத் தவறுவோர் நூன சித்தி பெற்றோராகக் கருதப்படுவர். அவர்கள் அடுத்து வரும் மூன்று வருடத்துக்குள் நூன சித்திப் பாடத்திற்குத் தோற்றி சித்திபெற்றால், பரீட்சையில் சித்திபெற்றோராகக் கணிக்கப்படுவர். (இது 2007 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும்.)

9.1 பரீட்சை முடிவுகளை வெளியிடல்.- விண்ணப்பதாரிகளின் பரீட்சை முடிவுகள் பற்றிய விவரங்கள் இந்து அறநெறிப் பாடசாலை அதிபர்/பொறுப்பாளருக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

10. **சான்றிதழ்**.- இப்பரீட்சையிற் சித்திபெறும் அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் சான்றிதழ்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

11. **பரிசு**.- இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுள் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்திபெறுவோருக்கு பரிசுகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும்.

12. **விடைத்தாள்களை மீள்பரிசீலனை செய்தல்**.- பரீட்சை முடிவுகள் வெளியாகி 30 நாட்களுக்குள், இத்திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் படிவங்கள் மூலம் இந்து அறநெறிப் பாடசாலை அதிபர்/பொறுப்பாளர் கோரியிருப்பின், விடைத்தாள்கள் மீள் பார்வையிடுவதற்குரிய வாய்ப்பு வழங்கப்படும். இதற்குரிய கட்டணத் தொகை அவ்வப்போது மாற்றம் பெறுவதால், குறித்த தொகை உரிய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும். இக்கட்டணம், பரீட்சை பெறுபேறுகளில் மீள் பரிசீலனையின்போது திருத்தம் இருப்பின் மட்டும் மீளச் செலுத்தப்படும். எக்காரணங்கொண்டும் விண்ணப்பதாரிக்கோ அல்லது அவரது பிரதிநிதிகளுக்கோ விடைத்தாள்களைப் பார்ப்ப தற்கான அனுமதி வழங்கப்பட மாட்டாது.

13. இங்கு குறிப்பிடப்படும் அனைத்து நிபந்தனைகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் அமைய நடந்துகொள்வதற்கு எல்லா விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டுள்ள அதேவேளை, இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அவை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபுக்கேற்பத் தீர்மானிக்கப்படும்.

அநுர எதிரிசிங்ஹ,
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2009, பெப்புருவரி 20.

இணைப்பு 1

மாவட்டங்களிலே பரீட்சை மண்டபங்கள் ஏற்படுத்தப்படவுள்ள நகரங்களும் நகர இலக்கங்களும் :

**கொழும்பு மாவட்டம் - 01**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மருதானை | 0101 |
| கொட்டாஞ்சேனை | 0102 |
| பம்பலப்பிட்டி | 0103 |
| நுகேகொடை | 0104 |
| அவிசாவளை | 0105 |
| ஹோமாகம | 0106 |

**கம்பஹா மாவட்டம் - 02**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கம்பஹா | 0201 |
| நீர்கொழும்பு | 0202 |
| வத்தளை | 0203 |

**களுத்துறை மாவட்டம் - 03**

| நகரம் | நகர எண் |
|---|---|
| களுத்துறை | 0301 |
| மத்துகம | 0302 |
| பாணந்துறை | 0303 |
| அழுத்கம | 0304 |

**காலி மாவட்டம் - 04**

| நகரம் | நகர எண் |
|---|---|
| காலி | 0401 |

**மாத்தறை மாவட்டம் - 05**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மாத்தறை | 0501 |
| தெனியாய | 0502 |

**ஹம்பந்தோட்டை மாவட்டம் - 06**

| நகரம் | நகர எண் |
|---|---|
| ஹம்பாந்தோட்டை | 0601 |

**இரத்தினபுரி மாவட்டம் - 07**

| நகரம் | நகர எண் |
|---|---|
| இரத்தினபுரி | 0701 |
| கஹவத்தை | 0702 |
| பலாங்கொடை | 0703 |
| இறக்குவானை | 0704 |

**கேகாலை மாவட்டம் - 08**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கேகாலை | 0801 |
| யட்டியந்தோட்டை | 0802 |
| வரக்காப்பொல | 0803 |

**குருநாகல் மாவட்டம் - 09**

| நகரம் | நகர எண் |
|---|---|
| குருநாகல் | 0901 |

**புத்தளம் மாவட்டம் - 10**

| நகரம் | நகர எண் |
|---|---|
| புத்தளம் | 1001 |
| சிலாபம் | 1002 |
| உடப்பு | 1003 |

**அநுராதபுரம் மாவட்டம் - 11**

| நகரம் | நகர எண் |
|---|---|
| அநுராதபுரம் | 1101 |

**பொலன்னறுவை மாவட்டம் - 12**

| நகரம் | நகர எண் |
|---|---|
| பொலன்னறுவை | 1201 |
| மனம்பிட்டிய | 1202 |

**மாத்தளை மாவட்டம் - 13**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மாத்தளை | 1301 |
| இரத்தோட்டை | 1302 |

**கண்டி மாவட்டம் - 14**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கண்டி | 1401 |
| புசல்லாவ | 1402 |
| கலஹா | 1403 |
| கம்பளை | 1404 |
| நாவலப்பிட்டி | 1405 |

**நுவரெலியா மாவட்டம் - 15**

| நகரம் | நகர எண் |
|---|---|
| நுவரெலியா | 1501 |
| ஹற்றன் | 1502 |
| பூண்டுலோயா | 1503 |
| தலவாக்கலை | 1504 |
| மஸ்கெலியா | 1505 |

**பதுளை மாவட்டம் - 16**

| நகரம் | நகர எண் |
|---|---|
| பதுளை | 1601 |
| வெலிமடை | 1602 |
| பண்டாரவளை | 1603 |
| ஹப்புத்தளை | 1604 |
| பசறை | 1605 |

**மொனராகலை மாவட்டம் - 17**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மொனராகலை | 1701 |

**அம்பாறை மாவட்டம் - 18**

| நகரம் | நகர எண் |
|---|---|
| அம்பாறை | 1801 |
| அக்கரைப்பற்று | 1802 |
| கல்முனை | 1803 |
| திருக்கோவில் | 1804 |
| பொத்துவில் | 1805 |
| சம்மாந்துறை | 1806 |

**மட்டக்களப்பு மாவட்டம் - 19**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மட்டக்களப்பு | 1901 |
| களுவாஞ்சிக்குடி | 1902 |
| வாழைச்சேனை | 1903 |
| செங்கலடி | 1904 |

**திருகோணமலை மாவட்டம் - 20**

| நகரம் | நகர எண் |
|---|---|
| திருகோணமலை | 2001 |
| மூதூர் | 2002 |

**வவுனியா மாவட்டம் - 21**

| நகரம் | நகர எண் |
|---|---|
| வவுனியா | 2101 |
| ஓமந்தை | 2102 |
| செட்டிக்குளம் | 2103 |

**மன்னார் மாவட்டம் - 22**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மன்னார் | 2201 |

**முல்லைத்தீவு மாவட்டம் - 23**

| நகரம் | நகர எண் |
|---|---|
| முல்லைத்தீவு | 2301 |
| புதுக்குடியிருப்பு | 2302 |
| ஒட்டுசுட்டான் | 2303 |

**கிளிநொச்சி மாவட்டம் - 24**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கிளிநொச்சி | 2401 |
| ஸ்கந்தபுரம் | 2402 |
| பூநகரி | 2403 |
| முழங்காவில் | 2404 |
| பளை | 2405 |

**யாழ்ப்பாண மாவட்டம் - 25**

| நகரம் | நகர எண் |
|---|---|
| யாழ்ப்பாணம் | 2501 |
| சாவகச்சேரி | 2502 |
| பருத்தித்துறை | 2503 |
| வேலணை | 2504 |
| நெடுந்தீவு | 2505 |

இணைப்பு – 02

அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை -
இந்து சமய பாடத்திட்டம்

1. சமய வரலாறு
2. சமய மெய்யியல்
3. சமய இலக்கியம்
4. சமய வாழ்வியல்

**1. சமய வரலாறு**

1. இந்து சமயத்தின் பொதுவான வரலாற்று நோக்கு

1.1 சிந்துவெளி நாகரிகம்
1.2 சனாதன தர்மம்
1.3 வேதகாலம்

1.3.1 வேதகால தெய்வங்களும், வழி பாட்டு முறைகளும்

1.4 இதிகாசங்கள்

1.4.1 வகை
1.4.2 தோன்றக் காரணம்
1.4.3 பகவத் கீதை

1.5 புராணங்கள்

1.5.1 பதினென் புராணவகை – தோன்றக் காரணம்

1.6 தரும சாத்திரங்கள்

2. சைவ சமய வரலாறு

2.1 சைவ சமயத்தின் தொன்மை
2.2 சிந்துவெளி நாகரிக காலச் சிவவழிபாடு
2.3 சிவாகமங்களின் தோற்றமும் வழிபாடும்

3. தமிழகத்துச் சைவசமய வரலாறு

3.1 சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படும் தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும்
3.2 பக்திநெறி

3.2.1 காரைக்காலம்மையார்
3.2.2 சமய குரவர் நால்வர்
3.2.3 ஆலயங்களும், வழிபாடும்

3.3 சாத்திரங்களும் கோத்திரங்களும்

3.3.1 கோயில் கட்டிடங்களின் வளர்ச்சி
3.3.2 திருமுறை, திவ்வியபிரபந்தத் தொகுப்பு
3.3.3 சந்தான குரவர் நால்வர்
3.3.4 மெய்கண்ட சாத்திரங்கள்
3.3.5 பிற்காலத்து தோத்திரப் பாடல்கள்

3.4 சைவ நிறுவனங்கள் : மடங்களும் ஆதீனங்களும்
3.5 ஞானியர் வரலாறு :

திருமூலர்

4. இலங்கையில் சைவம்

4.1 தொன்மை
4.2 புராதன ஆலயங்கள்
(சிறப்பாக) திருக்கேதீச்சரம்
திருக்கோணேச்சரம்
முன்னேச்சரம்
நகுலேச்சரம்
கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்
4.3 பிரதேச ஆலய வரலாறு
(மாணவர் தாம் வாழும் பிரதேசத்தில் உள்ள ஆலயம் பற்றி அறிதல்)

5. இலங்கையில் சைவ மறுமலர்ச்சி

5.1 பெரியார்கள்
5.1.1 ஆறுமுகநாவலர்
5.1.2 விபுலானந்தர்
5.2 சைவம் வளர்த்த நிறுவனங்கள்
5.3 ஞானியர்

**2. சமய மெய்யியல்**

1. வேதங்கள்

1.1 பல தெய்வக் கோட்பாடு
1.2 ஒரு தெய்வக் கோட்பாடு
1.3 வேதப் பிரிவுகள்

2. உபநிடதங்கள்

2.1 மகாவாக்கியங்கள்
2.2 அறக்கோட்பாடு

3. பகவத்கீதை

3.1 நால்வகை யோகம்

4. மூவகை வேதாந்தங்கள்

4.1 அத்துவைதம்
4.2 விசிட்டாத்வைதம்
4.3 துவைதம்
(இவற்றை அறிமுகப்படுத்தினால் போதும்)

5. சைவ சித்தாந்தம்

5.1 மெய்கண்ட சாத்திரங்கள் (14) அறிமுகம்
5.2 சற்கரிய வாதம்
5.3 முப்பொருள் (பதி, பசு, பாசம்)
5.4 சைவநாற்பாதங்கள் (சரியை, கிரியை, யோகம், ஞானம்)
5.5 குரு, லிங்க, சங்கம வழிபாடு
5.6 சிவசின்னங்கள்
5.7 தீட்சை

6. திருவருட்பயன் - 10 அதிகாரம்

3. ***சமய இலக்கியம்***

1. திருமுறைப் பாடல்கள்
(மனனம், பொழிப்பு, சந்தர்ப்பம்)

1.1 திருஞானசம்பந்தர் தேவாரம்
(அ) "வேயுறு தோளி பங்கன்..............."
(பதிகம் முழுவதும்)

1.2 அப்பர் தேவாரம்
(அ) "மாதர் பிறை கண்ணியானை ......."
(பதிகம் முழுவதும்)

1.3 சுந்தரர் தேவாரம்
(அ) திருக்கேதீச்சரத் திருப்பதிகம்
"நத்தார் படை ............................"
(பதிகம் முழுவதும்)

1.4 மாணிக்கவாசகர் - திருவாசகம்
(அ) திருவெம்பாவை (முழுவதும்)
(ஆ) சிவபுராணம்

1.5 திருவிசைப்பா
(அ) "அற்புதத் தெய்வம் ...................."
(ஆ) "கற்றவர் விழுங்கும் ...................."

1.6 திருப்பல்லாண்டு
(அ) "சீரும் திருவும் பொலிய ................"
(ஆ) "ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் ........."
(இ) "மிண்டு மனத்தவர் ................."

1.7 திருப்புராணம்
(அ) "ஐந்து பேரறிவும் ....................."
(ஆ) "தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உந்தன் ................."
(இ) "அண்ணலார் தமக்கீடு .............."

1.8 திருமந்திரம்
(அ) "அன்பும் சிவமும் ....................."
(ஆ) "உள்ளம் பெருங்கோயில் ..........."
(இ) "யாவர்க்குமாம் .........................."

1.9 இரண்டாம் திருமுறை
மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை – கபிலதேவநாயனார்
"திருவாக்குஞ் செய்கருமஞ் கைகூட்டும் செங்சொற் ...................."
காரைக்காலம்மையார் அருளிச் செய்த அற்புதத் திருவந்தாதி
"கண்ணாரைக் கண்டும் என் கையாரக் கூப்பியும் ..................."

2. ஏனைய தோத்திரப் பாடல்கள்

2.1 திருப்புகழ் - அருணகிரிநாதர்
(அ) "எதிரிலாத பக்தி ......................"
(ஆ) "பக்தியால் யாலுனை .............."

2.2 அபிராமி அந்தாதி – அபிராமிப்பட்டர்
(அ) "நின்றும் இருந்தும் கிடந்தும் ......"
(ஆ) "சித்தியும் சித்தி தரும் தெய்வமுமாகி .................."
(இ) "கண் களிக்கும்படி கண்டு கொண்டேன் .............."

2.3 பராபரக்கண்ணி – தாயுமானவர்
(அ) "கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க ............."
(ஆ) "மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கு"
(இ) "விரும்பு சரியை முதல் மெய்ஞானம் நான்கும் ..........."
(ஈ) "சினம் இறக்கக் கற்றாலும் சித்தி எல்லாம் பெற்றாலும் ............"
(உ) "எல்லாரும் இன்புற்ற இருக்க நினைப்பதுவே ................"

3. திவ்விய பிரபந்தங்கள்
திருப்பாவை :– ஆண்டாள்

(அ) "மாரிமழை முழைஞ்சல் முன்னிக் கிடத்துறங்கும்............"
(ஆ) அன்றிவ்வுலக மறந்தாயடி போற்றி ......"
(இ) "மாலே மணிவண்ணா மார்கழி நீராடுவான் ............"

4. கந்தபுராணம்
கந்தவிரதப் பாடல்கள் - 20
(தெரிவுசெய்யப்பட்டவை) – பாடல் ஒன்று முதல் இருபது வரை

5. பெரிய புராணம்
கண்ணப்பநாயனார் புராணம் - பாடல் 815 முதல் 835 வரை

6. திருவிளையாடற் புராணம் - பரம்சோதி முனிவர்
(அ) கால்மாறியாடின படலம் - 1475 பாடல் முதல் 1489 பாடல் வரை

7. நீதிப்பாடல்கள்
திருக்குறள் - திருவள்ளுவர்

(அ) அறன்வலியுறுத்தல் - 4 ஆம் அதிகாரம்
(ஆ) இல் வாழ்க்கை – 5 ஆம் அதிகாரம்
(இ) அடக்கமுடைமை – 13 ஆம் அதிகாரம்
(ஈ) ஒழுக்கமுடைமை – 14 ஆம் அதிகாரம்
(உ) நட்பு 79 ஆம் அதிகாரம்

4. ***சமய வாழ்வியல்***

1. ஆலய வழிபாடும் இறை நம்பிக்கையும்

1.1 திருக்கோயில் அமைப்பு
1.2 திருக்கோயில் வழிபாடு
1.3 நித்திய, நைமித்திய கிரியைகள்
1.4 இறை நம்பிக்கை (பக்தி அனுபவங்கள்)

2. வீட்டில் வழிபாடு

2.1 நித்திய வழிபாடு (காலை, மாலை, வழிபாடு)

2.2 விசேட வழிபாடு

(அ) கூட்டு வழிபாடு
(ஆ) தியானம்
(இ) செபம்

2.3 அகப்புறத் தூய்மை

3. விரதங்களும் பண்டிகைகளும்
3.1 விரதங்கள்

(அ) சிவராத்திரி
நவராத்திரி
விநாயகர் சதுர்த்தி
கந்தசஷ்டி
விநாயகர் சஷ்டி
திருவாதிரை
பிரதோஷம்
வைகுண்ட ஏகாதசி

(ஆ) அமாவாசை, பூரணை விரதங்கள்

3.2 பண்டிகைகள்

3.2.1 தைப்பொங்கல்
3.2.2 சித்திரை வருடப் பிறப்பு
3.2.3 ஆடிப்பிறப்பு
3.2.4 தீபாவளி
3.2.5 கார்த்திகை விளக்கு

4. அபரக் கிரியைகள்

4.1 பொது விளக்கீடு
4.2 மரணக் கிரியைகள்
4.3 சபிண்டீகரணம்
4.4 சிரார்த்தம்

5. சமய, ஆன்மீக விழுமியங்கள்

5.1 பெற்றோர், மூத்தோர், பெரியோர், குரு ஆகியோரைக் கனம் பண்ணல்
5.2 நற்குடி மக்களாக வாழ்வதற்கு உதவும் நெறிமுறைப் பண்புகளை வாழ்வில் கடைப்பிடித்தல்
5.3 அன்பு, உண்மை, கருணை, இன்னா செய்யாமை, பிறர் நலம் பேணல், கூடிவாழும் பண்பு, நீதி, கடமையுணர்வு முதலிய மனித விழுமியங்களைப் பேணல், இவற்றை அறிந்து கொள்ளல்.

6. சமய வாழ்வுடன் கலைகள்-

இசை
நடனம்
கட்டடம்
சாத்துப்படி
மாலை கட்டுல்
பண்ணிசை
சிற்பம்
ஓவியம்
சுவாமிக்கு அலங்காரம் செய்தல்
கோலம் போடுதல்

2-542

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.